## பெப்ரவரி – 18 –தவக்கால01ம் ஞாயிறு

**“காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது” மாற் 1:15**

### முதல் வாசகம் :தொடக்க நூல் 9 : 8 - 15

கடவுள் நோவாவிடமும் அவருடனிருந்த அவர் புதல்வரிடமும் கூறியது. "இதோ! நான் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் வழிமரபினரோடும் பேழையிலிருந்து வெளிவந்து உங்களோடிருக்கும் உயிரினங்கள், பறவைகள்,கால்நடைகள், நிலத்தில் உங்களுடன் உயிர்வாழும் விலங்கினங்கள் எல்லாவற்றோடும், மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலைநாட்டுகிறேன். உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன் சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது. மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வரவே வராது." அப்பொழுது கடவுள், "எனக்கும் உங்களுக்கும் உங்களுடன் இருக்கும் உயிருள்ள எல்லாவற்றிற்குமிடையே தலைமுறைதோறும் என்றென்றும் இருக்கும்படி, நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக, என் வில்லை மேகத்தின்மேல் வைக்கிறேன். எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும். மண்ணுலகின் மேல் நான் மேகத்தை வருவிக்க, அதன்மேல் வில் தோன்றும்பொழுது, எனக்கும் உங்களுக்கும் சதையுள்ள உயிரினங்கள் எல்லாவற் றுக்கும் இடையே உள்ள என் உடன்படிக்கையை நான் நினைவு கூர்வேன். உயிர்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்குத் தண்ணீர் இனி ஒருபோதும் பெருவெள்ளமாக மாறாது.

**பதில்பாடல்:** ஆண்டவரது உடன்படிக்கையைக் கடைப் பிடிப்போரின் பாதைகள் உண்மையானவை.

### இரண்டாம் வாசகம் :1 பேது 3:18–22

கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார். அவர் உங்களைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார். நீதியுள்ளவராகிய அவர் நீதியற்றவர்களுக்காக இறந்தார். மனித இயல்போடிருந்த அவர் இறந்தாரெனினும் ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர் பெற்றெழுந்தார். அந்நிலையில் அவர் காவலில் இருந்த ஆவிகளிடம் போய்த் தம் செய்தியை அறிவித்தார். நோவா பேழையைச் செய்து கொண்டிருந்த நாள்களில், பொறுமையோடு காத்துக் கொண்டிருந்த கடவுளை அந்த ஆவிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. சிலர், அதாவது, எட்டுப்பேர் மட்டும் அந்தப் பேழையில், தண்ணீர் வழியாகக் காப்பாற்றப்பட்டனர். அந்தத் தண்ணீரானது திருமுழுக்கிற்கு முன்னடையாளம். இத்திருமுழுக்கு உடலின் அழுக்கைப் போக்கும் செயல் அல்ல் அது குற்றமற்ற மனச்சான்றுடன் கடவுளுக்குத் தரும் வாக்குறுதியாகும் இது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வழியாக இப்போது உங்களுக்கு மீட்பளிக்கிறது. அவர் வான தூதர்களையும் அதிகாரங்களையும் வல்லமைகளையும் தமக்குப் பணிய வைத்து, விண்ணுலகம் சென்று, கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கிறார்.

### நற்செய்தி : மாற்கு 1 : 12 - 15

அக்காலத்தில் இயேசு தூய ஆவியால் பாலைநிலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பாலை நிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார் அப்போது சாத்தானால் சோதிக்கப்பட்டார் அங்கு காட்டு விலங்குகளிடையே இருந்தார். வானதூதர் அவருக்குப் பணிவிடை செய்தனர். யோவான் கைதுசெய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று அவர் கூறினார்.

**தியானம்:** ஆதிப் பெற்றோர் கடவுளின் கட்டளையை மீறியதால், பாவம் இவ்வுலகிற்குள் நுழைந்தது. சாத்தான் அவர்களை சோதித்த போது அவர்களால் நிலையாக நிற்க முடியவில்லை. ஆனால் யேசு பாலை நிலத்தில் சோதிக்கப்பட்ட போது அவர் உறுதியாக நின்றார். அதனால் பாவம் அவரை வெற்றி கொள்ளவில்லை. நமது வாழ்விலும் எமது விசுவாச வாழ்விற்கு எதிராக பல சோதனைகள் வருகின்றன. அவற்றை நாம் கடவுளின் உதவியுடன் வெற்றி கொள்ள வேண்டும். முதல் வாசகத்தில் நோவா கடவுளின் சொல்லைக் கேட்டு பேழை செய்தார். அதனால் அவர் காப்பாற்றப் பட்டார். கூடி இருந்தவர்கள் அவரை பழித்தார்கள். ஏன் என்றால் அவர்கள் அதுவரை வெள்ளப் பெருக்கை அறிந்ததில்லை. ஏன் நாம் கூட சுணாமி அலை தாக்கும் வரை அவ்வாறான ஒரு அழிவை தெரிந்து வைத்திருந்தோமா? இல்லைதானே! நாம் வாழும் உலகம் நீரால் சூழப்பட்டுள்ளது. இவ்வுலகை அழிக்க நீரே போதும். ஆனால் எல்லோரையும் அழிக்க மாட்டேன் என்று உறுதி செய்ய கடவுள் வானவில்லை மேகத்தில் நிறுத்தியுள்ளார். வெயிலும், மழையும் ஒன்றாக வரும்போது தான் எம்மால் வானவில்லை காண முடியும். அவ்வாறு மனிதனும், இறைவனும் ஒன்றாக வேண்டும். கடவுள் நம்மிலும், நாம் அவரிலும் குடி கொள்ள வேண்டும். அவ்வாறான வாழ்வைத்தான் இறைவன் நம்மிடம் கேட்கிறார். அதனைக் கொடுக்க நாம் தயாரா? யோவான் யேசுவின் பாதையை செம்மைப் படுத்தியது போல் நாமும் விண்ணரசை நோக்கிய எமது பாதையை சீராக்க வேண்டும். இவ்வுலகில் இருந்து நாம் எதனையும் எம்முடன் எடுத்து செல்ல முடியாது. நமது உடல் கூட நமக்கு சொந்தம் இல்லை. இவ்வுலக ஆடம்பரங்களில் மூழ்கி அதில் அதிக கவனம் செலுத்துவதால், நாம் நமது ஆன்மீக வாழ்வை இழந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே தவக்காலதில் பயணம் செய்யும் நாம் எமது ஆன்மீக வாழ்வை அழிவில் நின்று பாதுகாக்க முயற்சி செய்வோம்.